## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

அசல் வழக்கு எண்.536/2022 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 05-ம் தேதி வாதிகள் தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுகந்தி | ஜாதி | : |
| க/பெ.பெயர் | : சீனிவாசன் | மதம் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| வட்டம் | : | தொழில் | : |
| மாவட்டம் | : | வயது | : |

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் 2வது வாதி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1). 24.12.2012 தேதியிட்ட எங்களது தாயார் பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு நகல் **வா.த.சா.ஆ.1** ஆகும்.

2). 21.01.2013 தேதியிட்ட எங்களது தாயார் பெயரிலான பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் பதிவு நகல் **வா.த.சா.ஆ.2** ஆகும்.

3). 09.02.2019 தேதியிட்ட எங்களது தாயாரின் இறப்பு சான்றிதழ் **வா.த.சா.ஆ.3** ஆகும்.

4). 11.06.2020 தேதியிட்ட 1ம் பிரதிவாதி தமது வழக்குரைஞர் மூலம் எங்களுக்கு அனுப்பி வைத்த அறிவிப்பு **வா.த.சா.ஆ.4** ஆகும்.

5). 02.07.2020 தேதியில் நாங்கள் எங்களது வழக்குரைஞர் மூலம் 1ம் பிரதிவாதியின் வழக்குரைஞருக்கு அனுப்பி வைத்த பதில் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா.ஆ.5** ஆகும்.

6). 14.07.2020 தேதியில் 1ம் பிரதிவாதியின் வழக்குரைஞரிடமிருந்து எங்களது வழக்குரைஞருக்கு வரப்பெற்ற Rejoinder அறிவிப்பு **வா.த.சா.ஆ.6** ஆகும்.

7). 20.08.2018 1ம் பிரதிவாதியின் வழக்குரைஞர் தமது Rejoinder அறிவிப்புடன் இணைத்து அனுப்பியிருந்த ஜெராக்ஸ் உயில் **வா.த.சா.ஆ.7** ஆகும்.

8). 27.07.2020 தேதியில் எங்களது வழக்குரைஞர் மூலம் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது வழக்குரைஞருக்கு அனுப்பி வைத்த பதில் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா.ஆ.8** ஆகும்.

9). 1ம் பிரதிவாதியின் வழக்குரைஞரிடமிருந்து வரப்பெற்ற அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.த.சா.ஆ.9** ஆகும்.

10). தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு தாள் **வா.த.சா.ஆ.10** ஆகும்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை பிரதிவாதிகள் தரப்பில்**

**குறுக்குவிசாரணை பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**